**தூதுவர் அலெய்னா பி. டெப்லிட்ஸ்**
**மதங்களுக்கிடையிலான தேசிய மாநாடு**
**கொழும்பு, இலங்கை**
**ஜனவரி 28, 2019**

**தூதுவர் டெப்லிட்ஸ்:** ஆயுபோவான், வணக்கம், அஸ்ஸலாமுஅலைக்கும், காலை வணக்கம். இங்கு உங்களுடன் இணைந்துகொள்வதையிட்டு மகிழ்ச்சியடைகிறேன். மதங்களுக்கிடையிலான தேசிய மாநாட்டில் ஊக்குவித்து ஒருசில வார்த்தைகள் பேசுவதற்கும் ஆதரவு நல்குவதற்கும் என்னை அழைத்தமையை நான் பாராட்டுக்கிறேன்.

டாக்டர் பெரேரா கூறியதைப் போன்று ஐக்கிய அமெரிக்காவில் நாம் எமது சமூகங்களில் காணப்படும் வேறுபாடுகளை கொண்டாடுகின்றோம். எம்மில் பல்வேறு இனக் குழுக்கள், சமூகக் குழுக்கள் மற்றும் மதக் குழுக்கள் காணப்படுகின்றன. நாம் இந்த வேறுபாடுகளை அங்கீகரித்து கொண்டாடினாலும் கூட, பகிரப்பட்ட எமது அமெரிக்க மரபுரிமை மற்றும் அமெரிக்கர் எனும் பகிரப்பட்ட எமது அடையாளம் ஆகியவற்றுக்கு நாம் அனைவரும் மிகுந்த கடப்பாடுடையவர்களாக இருக்கிறோம். இதுவே எம்மை ஒரு நாடாக பலமாக வைத்திருப்பதாக நாம் நம்புவதுடன், உலகளாவிய மனித உரிமையாகவும் ஏனைய நாடுகளையும் வலிமைப்படுத்தக் கூடியதுமான விழுமியமாகவும் நாம் அதை கருதுகிறோம். எனவே, இலங்கையின் பன்முகத்தன்மை பற்றிய கருத்தாடல் ஒன்றை தொடர்வதற்காக ஏற்பாடு செய்யப்பட்ட இந்த முக்கியமான நிகழ்வுக்கு ஆதரவளிக்க முடிந்தமையையிட்டு நான் மகிழ்ச்சியடைகிறேன்.

நாடு முழுவதிலுமுள்ள இலங்கையர்களினதும் அனைத்து குழுமங்கள், இனங்கள் மற்றும் மதங்களையும் சேர்ந்த இலங்கை மக்களினதும் வாழ்க்கைத் தரங்களை மேம்படுத்துவதற்கான உதவிகளை வழங்கி இலங்கை அரசின் அபிவிருத்தி இலக்குகளை முன்னேற்றுவதற்கு கடந்த 60 வருடங்களுக்கு மேலாக அமெரிக்க அரசாங்கம் உண்மையில் இலங்கையுடன் இணைந்து செயற்படுகிறது.

உண்மையில், இந்தக் காலப்பகுதியில் எமது அபிவிருத்தி முகவரமைப்பின் ஊடாக மாத்திரம் 2 பில்லியன் அமெரிக்க டொலருக்கும் அதிகமான தொகையை நாம் முதலீடு செய்துள்ளோம்.

அதிலும் குறிப்பாக, தேசிய சமாதானப் பேரவையுடன் பல ஆண்டுகளாக நாம் நெருங்கி செயற்பட்டு வருவதுடன், இந்த வலுவான பங்காண்மையை நாம் பாராட்டுகின்றோம். பல்லின மற்றும் பல் மத சமூகங்களை ஐக்கியப்படுத்துவதற்கான தேசிய சமாதான பேரவையின் முயற்சிகளானது புரிந்துணர்வுகளையும் சகிப்புத்தன்மையையும் கட்டியெழுப்புதவதற்கு மிக முக்கியமானவையாகும். இங்கிருக்கும் நாம் அனைவரும் அதேபோல் வெளியிலுள்ள பரந்த சமூகத்தில் இருக்கும் அனைவரும் எதிர்பார்க்கும் அமைதியும் சுபீட்சமும் மிக்க எதிர்காலத்தை அடைவதற்கும் இந்த முயற்சிகள் முக்கியமாகும். அதை இங்கு காணப்படும் ஆர்வமாகவும் நான் கருதுகிறேன்.

உங்களுடைய நம்பிக்கையினால் வழிநடத்திச் செல்லப்படும் நீங்கள் ஒவ்வொருவரும் பொதுவான நிலைபாட்டையும் பொதுவான தீர்வுகளையும் அதேபோல் சாதகமான விளக்கங்களையும் கண்டறிந்திருப்பீர்கள். நீங்கள் சிறந்த வகையில் சாதகமான நடவடிக்கைகளை எடுத்துள்ளீர்கள் என்பதுடன், மிகவும் சாதகமான மாற்றத்தை ஏற்படுத்த செயற்பட்டு வருகிறீர்கள். ஏனையவர்களுக்கான முன்மாதிரி என்ற வகையில், உங்களது வெற்றிகளானது மக்கள் அவர்களது சொந்த நம்பிக்கையின் மீது பிரதிபலிப்பை ஏற்படுத்தவும் அவர்களது சுயமான செயற்பாடுகளையும் அவர்களது சொந்த பெறுமானங்களையும் ஊக்குவிக்கின்றன என்று நான் கருதுகிறேன். இது எதிர்காலத்தில் மேலும் அமைதிமிக்க மற்றும் அனைவரையும் உள்வாங்கிய இலங்கையொன்று உருவாக வழிவகுக்கும் என்று நம்புவதுடன், நல்லிணக்கத்துக்கான உலகளாவிய முன்மாதிரியொன்றாக எழுந்து நிற்கவும் உதவும்.

அதனாலேயே இன்று நீங்கள் இங்கு முன்வைக்கும் பணியானது மிகவும் முக்கியமானதாக அமைந்துள்ளது. ஏனெனில், இது வெறுமனே இன்றைய நாள் பற்றியதல்ல, இது எதிர்காலம் பற்றியது.

பன்முகத்தன்மை சாசனத்தை உருவாக்குவதற்கும், சமூகங்களின் மத்தியில் நீங்கள் முன்னெடுக்கும் ஏனைய பணிகளுக்கும் நான் நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன். ஒவ்வொரு சமூகத்துக்கும் அதேபோல், ஒவ்வொரு சமூக அங்கத்தவருக்கும் அவர்களது வெற்றி, சகிப்புதன்மை மற்றும் புரிந்துணர்வுகளை உறுதிப்படுத்துவதற்கு இலங்கை அரசாங்கம் மற்றும் இலங்கை மக்களுக்கு இது வழிக்காட்டலொன்றை வழங்குகிறது என்று நான் கருதுகிறேன்.

உங்களது இலங்கையின் பகிரப்பட்ட தொலைநோக்கானது புரிந்துகொள்ளப்பட்டதொன்றாக காண்பதற்கு நான் எதிர்பார்க்கிறேன் என்பதுடன், உங்களது இந்த முயற்சிகள் வெற்றியடைய அமெரிக்க மக்களின் சார்பாக வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி

# # # #